DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 99 /2021**

Deposition of Witness: PW1.

| | | | |
|---|---|---|---|
| Name | செனமல்லன் | Father Name – சிலமலைக்கவுண்டர் | |
| Age | 59 | Village – | மேலசொக்கநாதபுரம் |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.08.2025.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.**

1. நான் மேலசொக்கநாதபுரத்தில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். வழக்குரை சொத்து எங்குள்ளது என்றால் கோடாங்கிபட்டி கிராமம், தோப்புபட்டியில் உள்ளது. வழக்குரைச் சொத்திற்கும் என் ஊருக்கும் இடையே எவ்வளவு துாரம் என்றால் 7 கி.மீ துாரம் இருக்கும். என் அப்பாவிற்கு சிலமலைக்கவுண்டர் என்ற பெயரை தவிர வேறு பெயர் இல்லை என்றால் சரிதான். 2ம் வாதி நாகமல்லு என்பவர் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். 3வது இலக்கச் சொத்து எந்த தேதியில் எங்கு வைத்து கிரையம் பெறப்பட்டது என்றால் 1994ம் ஆண்டு சொக்கலிங்கம் மனைவி ராஜம் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினோம். அந்த சொத்தை முதலில் எங்களது சித்தப்பா ஓ.நாகமல்லு கிரையம் வாங்கியிருந்தார். அதன் பின்பு என் சித்தப்பாவிடம் இருந்து நான், எனது சகோதரர் நாகமல்லு மற்றும் ஒன்னப்பன் ஆகியோர் கடந்த 2000ம் வருடம் கூட்டாக கிரையம் வாங்கினோம்.

2. நான் வாங்கிய கிரையச் சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் என்ன என்றால் சர்வே எண்.736/5A4, மொத்த விஸ்தீரணமான 20 சென்ட்டில் 4ல் ஒருபாகம் கிரையம் வாங்கினோம். மேற்படி 20 சென்ட்டில் மீதமுள்ள 15 சென்ட் நிலம் வெவ்வேறு நபர்கள் வசம் உள்ளது என்றால் சரிதான். ஆனால் 20 சென்ட்டும் பிரிக்கப்படாமல் மொத்தமாக உள்ளது. அந்த 20 சென்ட் நிலமும் களமாக உள்ளது என்றால் சரிதான். 3வது இலக்கச் சொத்து எங்களுடைய

தனித்த அனுபவத்தில் இல்லை என்றால் சரிதான். 3 வது இலக்கச் சொத்திற்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளதா என்றால் எங்களது சித்தப்பா பெயரில் தான் பட்டா உள்ளது. அவரது பெயரில் வரி செலுத்தி வருகிறோம். 3 வது இலக்கச் சொத்திற்கு பிரிவினை இல்லாத 20 சென்ட்டிற்கும் சேர்த்து தான் வாசாஆ 5 ஆவணத்தில் நான்குமால் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. வாசாஆ 8 ஆவணத்தில் எங்களுடைய 5 சென்ட்டிற்கு மட்டும் தான் வில்லங்கச் சான்றிதழ் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். வாசாஆ 9 ஆவணம் கூட்டு பட்டாவாக தான் உள்ளது என்றால் சரிதான். வாசாஆ 13 ஆவணமான அடங்கலில் கூட்டுப்பட்டாவாக இருந்தால் நாகமல்லு வகையறா என்று இருந்திருக்க வேண்டும் என்றும் ஆனால் நாகமல்லு பெயரில் தான் அடங்கல் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் வருவாய் ஆவணங்களில் எவ்வாறு உள்ளதோ அவ்வாறு தருமாறு கேட்டு வாங்கினோம். வாசாஆ 15 ஆவணமான வரி ரசீதில் நாகமல்லு பெயர் மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். வாசாஆ 13 ல் உரிமையாளர் பெயர் குறிப்பிடாமல் மேலக்கால்மேடு என்றே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், எந்த உரிமையாளர் பெயரும் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். மேலக்கால்மேட்டில் தான் புளிமரம், களம் ஆகியவை உள்ளது என்றால் சரிதான். என்னுடைய முதல்விசாரணையில் மேலக்கால்மேடும், 3 வது இலக்கச் சொத்தும் உடன் இணைந்து உள்ளது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேலக்கால்மேட்டையும், களத்தையும் அனைத்து விவசாய்களும் பயன்படுத்தி வருகிறார்கள் என்றும் பிரதிவாதியிடம் சொத்தை நாங்கள் கிரையம் கேட்டு அவர் கொடுக்க மறுத்ததால் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

4. தற்போது வரை பிரதிவாதி அந்த களத்தை பயன்படுத்தி வருகிறார் என்றும், அதை தடுப்பதற்காக பொய்யான காரணங்களை கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2025.08.05 16:02:35 +0530

District Munsif,
Bodinayakanur.